பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 19 சனிக்கிழமை 04.09.2021 கதிர் 167

## 64 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 739 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 70 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

☞2

# கொரோனா காவுகொண்ட 52 பேரின் சடலங்கள் வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் தேக்கம்

## எரியூட்ட அனுராதபுரம் அனுப்புவதற்கு நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண வைத்தியசாலைகளின் பிரேத அறைகளில் தேக்கத்திலுள்ள 52 கொரோனா உடலங்களை எரியூட்டுவதற்கு அனுராதபுரத்துக்கு அனுப்புவதற்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் கொரோனா காரணமாக மரணித்தவர்களின் 52 உடலங்கள் சேர்ந்துள்ளதால் சவச்சாலை நெருக்கடியைச் சமாளிக்க அவற்றை வடமேல் மாகாணத்தில் எரியூட்ட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணம் முழுவதற்கும் தற்போது மின் மற்றும் எரிவாயு உடல் தகனம் செய்யக்கூடிய வசதிகள் யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானம் மற்றும் வவுனியா - பூந்தோட்டம் ஆகிய இரண்டு இடங்களில் மாத்திரமே காணப்படுகின்றன.

கோம்பயன்மணலில் நாள் ஒன்றுக்கு 4 அல்லது 5 உடலங்களையே எரியூட்டக்கூடியதாக இருக்கின்றது. இதே நிலைமையே பூந்தோட்டம் தகனச்சாலையிலும் காணப்படுகின்றது.

☞2

## மதுக்கடைகள் மூடப்பட்டமையால் அரசுக்கு 16,000 கோடி ரூபா நட்டம்

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால் அரசுக்கு 16 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் எம்.ஜே.குணசிறி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள்ளேயே இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும்

☞2

## வேலுகுமார் எம்.பிக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு

### இ.தொ.கா. அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிடப்படும் என்று இலங்கைதொழிலாளர் காங்கிரஸின் உபசெயலாளர் சச்சிதாநந்தன் தெரிவித்தார்.

கொட்டகலையில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், அரசு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் இணைந்து தோட்டக் காணிகளைத் தனியாருக்கு விற்றுள்ளார் என்று குறிப்பிட்டு சில தோட்டங்களைக் கூறினார்.

☞2

## அச்சுவேலியில் மின்னல் தாக்கி உயிரிழந்தவரின் இறுதி ஊர்வலத்தில் பெருமளவானோர் பங்கேற்பு



(ந.லோகதயாளன்)

அச்சுவேலியில் மின்னல் தாக்கி உயிரிழந்தவரின் இறுதிச் சடங்கில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

அச்சுவேலி, நாவற்காடுப் பகுதியில் கடந்த 02ஆம் திகதி மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியதில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதியான அப்பகுதியைச் சேர்ந்த தியாகராசா மதனபாதம் (வயது 40) என்பவர் உயிரிழந்திருந்தார்.

இன்று அச்சுவேலி முழுங்கன் இந்து மயானத்தில் சடலம் தகனம் செய்யப்பட்டது.

இதன்போது, அவரது நண்பர்கள்,

☞2

## பல சக்திவாய்ந்த முடிவுகள் திங்கட்கிழமை எடுக்கப்படும்

### ஆசிரியர் சங்கங்கள் தெரிவிப்பு



ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் எதிர்கால நடவடிக்கைக்காக நாளைமறுதினம் திங்கட்கிழமைக்குப் பின்னர் பல வலுவான முடிவுகள் அறிவிக்கப்படும் என்று இலங்கை

☞2

## நடமாடியோருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைமீறிவீதியில்பயணித்தோருக்கு எதிராகக் கோப்பாய் பொலிஸாரால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட

☞2

## காத்தான்குடியைச் சேர்ந்தவரே நியூசிலாந்தில் வெறியாட்டம்!



நியூசிலாந்தில் கத்திக்குத்துத் தாக்குதலை மேற்கொண்டு ஆறு பேரைக் காயப்படுத்திய இலங்கை நபர் தொடர்பான திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

எம்.சம்சுதீன் அதில் அல் அஸ்கார் கவுறடி வீதி, காத்தான்குடி - 01, மட்டக்களப்பைச் சேர்ந்தவரே இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

1989ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 7 வயதில் வெளிநாடு சென்றுள்ளார்.

இவர் கொழும்பு இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுள்ளார் எனவும், பின்னர் 2011ஆம் ஆண்டு

☞2

### நியூசிலாந்து கத்திக் குத்துத் தாக்குதலுக்கு

## 22 முஸ்லிம் அமைப்புகள் ஒன்றிணைந்து கண்டனம்

நியூசிலாந்தின் ஒக்லன்ட் பகுதியில் இலங்கையர் ஒருவர் மேற்கொண்ட கத்திக் குத்துத் தாக்குதலை இலங்கை முஸ்லிம் சிவில் அமைப்புகள் கண்டித்துள்ளன.

நியூசிலாந்துத் தாக்குதலுக்கு இலங்கையின் 22 முஸ்லிம் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து கண்டனம் வெளியிட்டுள்ளன.

நியூசிலாந்தில் வசித்த இலங்கையரின் தீவிரவாதத் தாக்குதல் தமக்கு அதிர்ச்சி மற்றும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என முஸ்லிம் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தீவிரவாத நடவடிக்கைகள் எந்தவொரு இன, மத, கலாசாரத்துடனும்

☞2

## மதுக்கடைகள் மூடப்பட்டமையால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூறியுள்ளார்.

மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால் நாளொன்றுக்கான நட்டம் 700 கோடி ரூபா என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## கொரோனா காவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆனால், தற்போது வடக்கு மாகாணம் முழுவதும் 52 கொரோனா உடலங்கள் சேர்ந்துவிட்டதால் அவற்றை வடமேல் மாகாணத்திலுள்ள அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவையிலுள்ள தகனசாலைகளில் எரியூட்டுவதற்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஏற்பாடு செய்துள்ளார்.

கொரோனா காரணமாக உயிரிழந்தவர்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் 20 உடலங்கள் காணப்படுவதுடன், யாழ். மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகளையும் சேர்த்து 31 உடலங்கள் உள்ள அதேநேரம் கிளிநொச்சியில் 9 உடலங்களும், முல்லைத்தீவு, மன்னார், வவுனியாவில் 12 உடல்களுமாக மொத்தம் 52 உடலங்கள் எரியூட்ட வேண்டிய அவசர நிலைமையில் காணப்படுகின்றன.

இதற்கமைய நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் கட்டமாக 10 உடலங்கள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. இவற்றில் 5 உடலங்கள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவை. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உடலங்களைப் பொலன்னறுவை ஹிங்குராகொடவிலுள்ள தகனசாலையில் எரியூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 64 ஆயிரத்துக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 64 ஆயிரத்து 647 ஆக உயர்வடைந்துள்ளது.

அதேபோன்று மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்று 1,335 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் 1,959 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வேலுகுமார் எம்.பிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது ஒரு பாரிய பிரச்சினை. அவருக்கு அரசியல் செய்ய முடியாத நிலையை மறைப்பதற்காக அதனை வேறு விதமாக வெளிப்படுத்துகின்றார். மக்களுக்கும் சேவை செய்யவில்லை. மக்களிடத்திலும் செல்ல முடியாது. இ.தொ.காவை விமர்சித்தால்தான் அரசியல் செய்ய முடியும் என்ற நிலைக்கு வந்துள்ளார்.

இது தொடர்பாக நாங்கள் ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளோம். எந்தவொரு அடிப்படைத் தன்மையும் இல்லாமல் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைப்பது அநாகரிகமான செயல் - என்றார்.

## பல சக்திவாய்ந்த ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க இன்று காலை ஆசிரியர்களுக்கு சமூக ஊடகங்களில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

திங்கட்கிழமை ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையில் அமைச்சரவை மேலும் தேவையான முடிவுகளை எடுக்கத் தவறினால் இந்தப் போராட்டம் மேலும் விரிவடையும்.

சுபோதனி குழு அறிக்கையில் முன்மொழியப்பட்ட சம்பளத்தை முதல்கட்டமாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு வெளியாகும் வரை ஆசிரியர்களின் போராட்டம் எந்த வகையிலும் தடைப்படாது என்றும் மஹிந்த ஜயசிங்க மேலும் குறிப்பிட்டார்.

## நடமாடியோருக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதிகளில் பயணத்தடையை மீறிப் பொதுமக்கள் வீதிகளில் பயணிப்பதோடு வீதிகளில் சுகாதார நடைமுறையைப் பின்பற்றாது வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதால் கொரோனாத் தொற்று பரவல் அதிகரிப்பதற்குரிய வாய்ப்பு காணப்படுகின்றது.

இதனைத் தடுக்கும் முகமாக இன்று காலை கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கோப்பாய் பொலிஸாரால் விசேட சுற்றுக் காவல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அத்தியாவசிய சேவை தவிர்ந்து வீதியில் பயணித்தோர் மற்றும் பயணத்தடை வேளையில் சுகாதார நடைமுறையைப் பின்பற்றாது வீதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டோரின் விவரங்கள் பொலிஸாரால் சேகரிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்குட்படுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

## அச்சுவேலியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறவினர்கள் எனப் பலரும் கூடி அஞ்சலி செலுத்தி மயானம் வரை அவரது உடலுடன் ஊர்வலமாகச் சென்று சடலத்தைத் தகனம் செய்தனர்.

அதேவேளை, அவரது இறுதி ஊர்வலத்தில் அவர் செலுத்திய பஸ்ஸையும் அவரது நண்பர்கள் செலுத்தி வந்தனர்.

## 22 முஸ்லிம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்புடையவை அல்ல எனும் நியூசிலாந்து பிரதமரின் கருத்துடன் தாம் உடன்படுவதாகவும் இலங்கை முஸ்லிம் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

நியூசிலாந்தில் நடைபெற்ற மனிதாபிமானமற்ற தாக்குதலை நாங்கள் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு, இதனால் காயமடைந்தவர்களுக்கு எமது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். தாக்குதல்தாரி இலங்கையைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து மிகவும் கவலையடைகின்றோம் என்றும் இலங்கையின் 22 முஸ்லிம் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து தெரிவித்துள்ளன.

## காத்தான்குடியைச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நியூசிலாந்துக்குச் சென்றுள்ளார் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் 4 சகோதரர்களைக் கொண்ட குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாகப் பிறந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. ஒரு பெண் சகோதரியும் தந்தையாரும் கனடாவில் வசிக்கும் நிலையில், ஏனைய இரண்டு சகோதரர்களும் கட்டார், சவுதியில் வசிக்கின்றனர்.

கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட குறித்த நபர் நியூசிலாந்து பொலிஸாரால் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொரு செய்தி 6ஆம் பக்கத்தில்

**வேலைவாய்ப்பு**

**சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை. தொடர்புகளுக்கு - 076 740 3814**

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தடுப்பூசிக் குழப்பங்கள்

காலத்தே பயிர் செய்ய வேண்டும் என்பர். பருவம் தப்பின் பயன் இராது. இது வேளாண்மைக்கு மாத்திரமல்ல, பொதுவாக எல்லா விடயங்களுக்கும் பொருந்தும்.

குறிப்பாக கொரோனாத் தொற்றுப் போன்ற பேரிடரை எதிர்கொள்வதில் இது முக்கியமானது. தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்காக பொது முடக்கத்தை ஏற்படுத்துவதில் இருந்து, உரிய தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வது வரையில் விடயங்கள் காலத்தே செய்யப்படவில்லை என்ற நியாயமான குற்றச்சாட்டுகள் உண்டு.

தடுப்பூசி பெறுவதையும் பொது முடக்கத்தையும் நேரத்துடன் – உரிய வேளையில் – செய்திருந்தால் இழப்பும் பாதிப்பும் இத்துணை மோசமாக இருந்திராது. குதிரை ஓடிய பின் லயத்தை மூடிய கதையாகவே விடயங்கள் கையாளப்பட்டன.

இழுத்துப் பறித்துக் காலதாமதமாகவே பொது முடக்கம் கொண்டுவரப்பட்டது. தடுப்பூசிகளும் தாமதமாகவே பெறப்பட்டன.

இப்போது தடுப்பூசிகளும் ஓரளவு தாராளமாக வந்துவிட்டன. பொதுமுடக்கத்தைப் பிரகடனப்படுத்தி, நீடிக்கவும் அரசு இணங்கிவிட்டது. ஆனாலும் இரண்டிலும் இழுபறியும் குழப்பமும் தாராளமாகவே நீடிக்கின்றன. இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பொதுமுடக்க ஊரடங்கு எப்படி பின்பற்றப்படுகின்றது என்பது வெளிப்படையானது. எல்லோருடைய விசனமும் கூட அதுதான்.

அதே போன்ற நிலைமைதான் தடுப்பூசி வழங்கலிலும். சுகாதார – மருத்துவ விடயங்கள் இராணுவப் பாணி நிர்வாகத்தினால் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கின்றன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சீறுகின்றது.

தடுப்பூசி ஏற்றும் வைத்தியசாலைகளும், சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகளும் போதிய தடுப்பூசிகள் விநியோகிக்கப்படாமையால் தங்கள் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் தடுமாறுகின்றன. ஆனால் இராணுவம் மூலம் தடுப்பூசி ஏற்றும் வேலைக்கு மட்டும் தாராளமாக தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன என அந்த அமைப்பு பகிரங்கமாகக் குற்றம் சுமத்துகின்றது.

ஒரு நாளைக்கு சுமார் 5 லட்சம் தடுப்பூசிகளை நாடு முழுவதும் ஏற்றக்கூடிய உஷார் நிலையில் தாங்கள் இருக்கின்றனர் என சுகாதார மருத்துவத் துறையினர் கூறுகின்றனர். ஆனால்அவர்களுக்குத்தேவையானதடுப்பூசிகளை வழங்காமல் இராணுவத்தினர் ஊடாகத் தடுப்பூசி செலுத்தச் செய்வதில் சுகாதார அமைச்சின் செயலாளரான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் டாக்டர் சஞ்சீவி முனசிங்க தலைமையிலான குழு மும்முரமாக இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிடுகின்றது.

அரச சுகாதார – மருத்துவத் துறையினர் சினோபோர்ம், மெடோனா, ஸ்புட்னிக்வி போன்ற அனைத்து ரக தடுப்பூசிகளையும் செலுத்துகின்றனர். ஆனால் நாட்டுக்கு வந்த அமெரிக்கத் தயாரிப்பான பைஸர் தடுப்பூசிகளை செலுத்தும் தகுதி இராணுவத்துக்கு மட்டும் வழங்கப்பட்டிருக்கின்றமை ஏன் என்றும் அந்த அமைப்பு கேட்டுள்ளது.

அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு முழுக் குறியாக நின்று தடுப்பூசி செலுத்துவதுதான் முன்னுரிமையில் முக்கியமானது. அதைச் செய்து முடிக்க முன்னரே 30 முதல் 60 வயது வரையான வயதினருக்குத் தடுப்பூசி ஏற்றும் பணியை ஆரம்பித்தனர். இப்போது அந்தப் பணி பூர்த்தியடைய முன்னர் – அரைகுறை நிலையில் – 18 முதல் 30 வயது உடையோருக்கு தடுப்பூசி ஏற்றும் வேலையைத் திடுதிப்பென ஆரம்பித்துள்ளனர். அதிலும்கூட மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் இருக்க, அரசியல் ரீதியாக அரசுத்தரப்பில் சிலருக்கு தேவையான அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளில் அது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டாயம் விரைந்து ஆரம்பிக்கப்பட வேண்டிய இடங்களில் இது மேற்கொள்ளப்படவில்லை என்றும்அந்தஅமைப்புவிசனத்துடன்சுட்டிக்காட்டுகின்றது.

இத்தகைய குழப்பமான முடிவுகளை எடுத்து, பேரிடர் காலத்தில் நாட்டை மேலும் சிக்கலுக்குள் மாட்டுவதில்தான் இந்த இராணுவப் போக்கு நிர்வாகம் முழு மூச்சாக இருக்கின்றது என்பது வெளிப்படையானது.

# மக்களின் குரல்வளையை நசுக்கும் ஓர் ஏற்பாடே அவசரகாலச் சட்டம்

## செல்வம் எம்.பி. குற்றச்சாட்டு



அவசரகாலச் சட்டம் மக்களின் குரல் வளையை நசுக்குகின்ற ஒரு சட்டமாக இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ஊடகவியலாளர் சந்திப்பில் செல்வம் அடைக்கலநாதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை கொரோனாத் தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைக்கு பயன்படுத்துவதாக காட்டிக்கொண்டு சட்டத்தை கையில் எடுத்துள்ளார்.

மேலும், இராணுவத்தினருடைய அதிகாரங்களை இராணுவத்துக்கு வழங்கி, ஜனநாயக ரீதியான போராட்டங்களில் ஈடுபடுகின்றவர்களைக் கைது செய்வதற்கான ஓர் அத்திவாரமாக இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயக நாடு எனக் கூறிக் கொண்டு ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்துவதற்கான அத்திவாரத்தை இந்த சட்டத்தின் ஊடாக ஜனாதிபதி ஏற்படுத்தியுள்ளார்.

அண்மையில் இந்த சட்டத்தின் ஊடாக ஓய்வு பெற்ற இராணுவ தளபதியை குறித்த குழுவிற்கு ஜனாதிபதி நியமித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பார்க்கிலும் அவசரகாலச் சட்டம் அன்றாடம் குரல் கொடுக்கின்ற எமது மக்களின் குரல் வளையை நசுக்குகின்ற ஒரு சட்டமாக அமைந்துள்ளது.

எனவே, மக்களைப் பாதிப்புக்கு உள்ளாக்குகின்ற அவசர காலச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். ஜனநாயக நாட்டில் மக்கள் சுதந்திரமாகச் செயற்பட வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஊரடங்கு காலப்பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபரொருவர் மஸ்கெலியாவில் சிக்கினார்



தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்ட காலப்பகுதியில் தோட்டத்தொழிலாளர்களை இலக்கு வைத்து மிகவும் சூட்சுமமான முறையில் பாழடைந்த வீடு ஒன்றில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட வந்த நபர் ஒருவரை மஸ்கெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சுற்றிவளைப்பு மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை கவரவில பாடசாலை சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்தவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் , அவரிடமிருந்து கசிப்பு தயாரிப்பதற்காக தயார் நிலையில் இருந்து 60 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவும் மற்றும் 35 லீற்றர் கசிப்பு ஆகியன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக மிகவும் இரகசியமான முறையில் மிகப்பெரிய அளவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார் எனப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலினையடுத்தே குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சுற்றிவளைப்பின் போது கசிப்பு உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமையுடன், எதிர்வரும் 08 ஆம் திகதி ஹற்றன் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள மக்களின் சுதந்திரத்தை அரசு பறிக்கின்றது!

## கரு ஜயசூரிய காட்டம்



மக்கள் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் வேளையில் அவர்களின் சுதந்திரத்தை அரசாங்கம் பறிக்கின்றதென சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய உணவுப்பொருள்களில் ஏற்பட்டுள்ள விலையேற்றம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அத்தியாவசிய உணவுப்பொருள்களை செயற்திறனான வகையில் பகிர்ந்தளிப்பதில் அரசாங்கம் தோல்வியடையும் வேளையில், அவசர காலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது என கரு ஜயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை சில மாதங்களுக்கு முன்னர் ஒரு கிலோகிராம் சீனியின் சந்தை விலை 85 ரூபாவாகக் காணப்பட்டதுடன், போதுமானளவு சீனி கையிருப்பில் உள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது. ஆனால் நேற்று முன்தினம் சீனியின் சந்தை விலை 40 ரூபாவால் அதிகரித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இந்தியா – அமெரிக்க பாதுகாப்புத்துறை மந்திரிகள் பேச்சு நவம்பரில் நடைபெறும்

இந்தியா– அமெரிக்க வெளியுறவுத்துறை, பாதுகாப்புத்துறை மந்திரிகள் பங்கேற்கும் டூ பிளஸ் டூ பேச்சு நவம்பரில் அமெரிக்காவில் நடைபெறும் என வெளியுறவுத் துறைச் செயலர் ஹர்சவர்த்தன் சிரிங்லா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி மாளிகையின் உயர் அதிகாரிகள், வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் ஆகியோருடன் ஹர்சவர்த் தன் சிரிங்லா பேச்சு நடத்தினார். அப்போது நவம்பரில் இருநாடுகளுக்கு இடையிலான டூ பிளஸ் டூ பேச்சு நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.ஆனால் திகதிகள் இன்னும் முடிவாகவில்லை என சிரிங்லா தனது அமெரிக்க பயணத்தின் போது கூறினார்.





## மனித உரிமைகளுக்கு தலிபான்கள் மதிப்பளிக்க வேண்டும்

### ஐரோப்பிய யூனியன் வலியுறுத்தல்

தலிபான்கள் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியமாகும் என ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது. ஐரோப்பிய யூனியனுக்கான வெளியுறவுக் கொள்கை தலைவர் போர்ரெல் இது குறித்து கூறியதாவது: –

ஆப்கானிஸ்தான் மக்களை ஆதரிப்பதற்காக ஆப்கானிஸ்தானின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட தயராக உள்ளோம். தலிபான்கள் அரசின் செயல்பாடுகளை பொறுத்து அவர்களுடனான தொடர்பு அதிகப்படுத்தப்படும். ஆப்கானிஸ்தானின் புதிய அரசாங்கம் கண்டிப்பாக பயங்கரவாதிகளுக்கு புகலிடம் கொடுக்கக் கூடாது. மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு, சட்டம் ஒழுங்கு மற்றும் சுதந்திரமான ஊடகங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும். பிற அரசியல் அமைப்புகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றார்.

## பஞ்ஷிர் பள்ளத்தாக்கும் தலிபான்கள் வசமானது





முழு ஆப்கானிஸ்தானையும் கைப்பற்றியிருந்தாலும் தலிபான்களின் வசப்படாத சிறிய பள்ளத்தாக்குப் பகுதியாக இருந்து வந்த பஞ்ஷிர் பள்ளத்தாக்கைக் கைபற்றி முழு ஆப்கானையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டோம் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

தலிபான்களை ஏற்காத பஞ்ச்ஷிர் மாகாண மக்களுக்கும் தலிபான்களுக்கு எதிராக சண்டை நடந்து வந்தநிலையில் குறிதத்த பகுதிகளில் இருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறி வருகின்றனர். இந்தநிலையில் பஞ்ஷிர் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்ட வந்ததாக தலிபான்கள் அறிவித்துள்ளனர். பஞ்ஷிர் பள்ளத்தாக்கு தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என றொய்ட்டர் செய்தி நிறுவனமும் தெரிவித்துள்ளது.



## எங்கள் போராட்டம் தொடரும் பஞ்ஷிர் போராளிகள் தெரிவிப்பு

தலிபான்களுக்கு எதிரான எங்கள் எதிர்ப்பு தொடரும். தொடர்ந்து போராடுவோம் என்று ஆப்கானிஸ்தானின் முன்னாள் துணை அதிபரும், பஞ்ஷிர் போராளிக் குழுவின் தலைவருமான அம்ருல்லா தெரிவித்துள்ளார்.

ஆப்கான் முன்னாள் துணை அதிபர் அம்ருல்லா சாலே தலிபான்களை நீண்ட காலமாக எதிர்த்து வருபவர். ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய நிலையில் அந்நாட்டின் பெரும்பாலான பகுதி தலிபான்கள் கட்டுப்பாட்டில் வந்தாலும் பஞ்ஷிர் பகுதி மட்டும் தலிபான்களை எதிர்த்து போராடி வருகிறது. இந்தநிலையில் பஞ்ஷிர் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்ட வந்ததாகவும் அம்ருல்லா சலே தப்பியோடி விட்டார் எனவும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், தான் தனது மண்ணிலேயே இருக்கிறேன் எனவும் எங்கும் தப்பியோடவில்லை என்றும் அறிவித்துள்ளார் அம்ருல்லா சலே. தலிபான்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

## எத்தியோப்பியாவில் 50 லட்சம் பேர் பட்டினி உடனடியாக உதவுமாறு ஐ.நா. அழைப்பு

அரச படைக்கும், டீக்ரே மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கடந்த பத்து மாதங்களாக நடந்து வருகின்ற போரால் எத்தியோப்பியாவின் டீக்ரே பகுதி பெரிய நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. அந்தப் பகுதியில் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு உதவிகள் சென்று சேரவில்லை என்றும் அங்கு வரும் உதவிகள் தடுக்கப்படுகின்றன என்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. அந்தப் பகுதி மக்கள் மிக அபாயகரமான நிலையில் உள்ளனர். லட்சக் கணக்கானோர் உணவு, ஊட்டச்சத்து, மருந்து மற்றும் பல முக்கிய உதவிகளை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் எத்தியோப்பியாவின் மனிதாபிமான பணிகள் துறையின் ஒருங்கிணைப்பாளர் க்ரான்ட் லெய்டி கூறியுள்ளார். அங்கு நிலவுகின்ற பசி, பட்டினி, பஞ்சம் போன்ற சூழலைத் தவிர்க்க வேண்டுமானால் சுமார் 52 லட்சம் பேருக்கு உடனடியாக உதவிகள் தேவை என்று ஐக்கிய நாடுகள் சபை கணக்கிட்டுள்ளது.





# ஆளில்லா போர் விமானம் தயாரிப்பு இந்தியாவும் அமெரிக்காவும் ஒப்பந்தம்

ஆளில்லா போர் விமானம் தயாரிக்கும் திட்ட ஒப்பந்தத்தில் இந்திய – அமெரிக்க பாதுகாப்புத் துறைகள் கையெழுத்திட்டுள்ளன.

இது தொடர்பாக இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக நடவடிக்கையில் (டி.ரி.ரி.ஐ.) வான் பாதுகாப்பு அமைப்பு கூட்டு செயற்குழு திட்டத்தின்கீழ், இந்த ஒப்பந்தம் கடந்த ஜுலை 30 ஆம் திகதி கையெழுத்தானது. பாதுகாப்புஉபகரணத்தைகூட்டாகஉருவாக்குவதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையேயான பாதுகாப்பு தொழில்நுட்ப கூட்டுறவை வலுப்படுத்துவதில் இந்த ஒப்பந்தம் குறிப்பிடத்தக்க நடவடிக்கை ஆகும்.

டி.ரி.ரி.ஐ. திட்டத்தின்கீழ் நிலம், கடல், வான் மற்றும் விமானம் தாங்கிப் போர்க் கப்பல்களுக்கான தொழில்நுட்பங்கள், பரஸ்பர ஒப்பந்தத் திட்டங்கள் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. ஆளில்லா போர் விமானத்தை இணைந்து தயாரிப்பதற்கான திட்ட ஒப்பந்தம் இந்தத் திட்டத்தில் மிக முக்கியமான சாதனையாகும்.

இந்தத் திட்ட ஒப்பந்தம், ஆளில்லா போர் விமானத்தின் மாதிரியை இணைந்து உருவாக்குவதில் இந்திய விமானப்படை ஆய்வுகூடம், இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (டி.ஆர்.டி.ஓ.) ஆகியவை வடிவமைப்பு, உருவாக்கம், செய்முறை விளக்கம், பரிசோதனை போன்றவற்றில் கூட்டாக செயல்படுத்துவதை சுட்டிக்காட்டுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் வான் பாதுகாப்பு அமைப்புக் கூட்டுச் செயற்குழுவின் துணைத் தலைவர்களாக உள்ள இந்திய விமானப்படை திட்டங்களுக்கான துணை தளபதி எயார் வைஸ் மார்ஷல் நர்மதேஸ்வர் திவாரி, அமெரிக்க விமானப்படையின் விமானப்படை பாதுகாப்பு உதவி மற்றும் ஒத்துழைப்பு இயக்குநரகத்தின் இயக்குநர் பிரிகேடியர் ஜெனரல் பிரைன் ஆர்.ப்ரூக்பயூர் ஆகியோர் கையெழுத்திட்டனர் என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# ஓராண்டில் தினசரி 14 தொன் கொரோனாக் கழிவுகள் சேகரித்து அகற்றப்பட்டன என தமிழக அரசு தகவல்



மருத்துவமனைகள், தனிமைப் படுத்தப்பட்ட முகாம்கள், வீடுகள் மற்றும் ஆய்வகங்களில் உருவாகும் கொரோனாக் கழிவுகள், பொது மருத்துவக்கழிவுகள் சுத்திகரிப்பு நிறுவனங்களால் முறையாக சேகரிக்கப்பட்டு, அகற்றப்பட்டு வருகின்றன. சேகரிக்கப்படும், மருத்துவக்கழிவுகளை எரிப்பதற்கு கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள எரி நிலையத்தைப் பயன்படுத்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த ஏப்ரல் 2020 முதல் ஜுலை 2021வரையில் சராசரியாக தினசரி, 14 தொன் கொரோனாக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளதாகவும் கொரோனா அல்லாத மருத்துவக்கழிவுகள் 35 தொன் அளவுக்கு அகற்றப்பட்டுள்ளதாகவும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் கொள்கை விளக்க குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெகிழிப் பைகளின் பயன்பாட்டுக்கு தமிழகத்தில் புதிய தடைகள் விதிப்பு



நெகிழிப்பொருள்களின்பாவனைக்கு தமிழகத்தில் தடையுள்ள நிலையில் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், தமிழகத்தில் 75 மைக்கிரோன் தடிப்புக்கு கீழான அளவுகளையுடைய உள்ள நெகிழிக் கைப்பைகள் மற்றும் 60 கிராம் அளவிற்கு குறைவான அளவுடைய, நெய்யப்படாத நெகிழிப்பைகள் போன்றவற்றுக்கு வரும் 30ஆம் திகதி முதல் பயன்படுத்தத் தடை விதிக்கப்படுகிறது என தமிழக அரசு அறிவித்துள்ளது.

75 மைக்ரோனுக்கு கீழான அளவுடைய நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்த செப்டெம்பர் 30 முதல் தமிழகத்தில் தடை விதிக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

ஏற்கனவே மீள் சுழற்சிக்குட்படுத்த இயலாத அத்தோடு, 120 மைக்ரோன் தடிப்புக்கு கீழ் உள்ள நெகிழிக் கைப்பைகள் 31.12.2022 முதல் பயன்படுத்தத் தடை விதிக்கப்படும் எனவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதற்குத் தடையில்லையாம்

## முறையீட்டு மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி



தமிழகக் கோயில்களில் ஆகம விதிகளை மீறி தமிழில் அர்ச்சனை செய்யக்கூடாது எனவும் சமஸ்கிருதத்தில் மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும் எனவும் கூறி ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ரங்கராஜன் நரசிம்மன் என்பவர் பொதுநல மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் குறுக்கிட்டு ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் தமிழில் அர்ச்சனை செய்ய எந்தத் தடையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்த மொழியில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்பது பக்தர்களின் விருப்பத்திற்கு உட்பட்டது.

எந்த மொழியில் பக்தர்கள் விருப்பப்பட்டு கேட்கிறார்களோ அந்த மொழியை அர்ச்சகர்கள் தேர்வு செய்து கொள்ளலாம். குறிப்பிட்ட மொழியில்தான் அர்ச்சனை செய்ய வேண்டும் என நீதிமன்றம் வற்புறுத்த முடியாது. விரிவான ஆய்வுக்குப்பிறகு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் மறு ஆய்வுக்கு உட்படுத்த முடியாது எனக்கூறி மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# வ.உ.சி. பெயரில் கப்பலோட்டிய தமிழன் விருது தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்



கப்பல் சார்ந்த துறையில் சிறந்து விளங்கும் தமிழர் ஒருவருக்கு ஆண்டுதோறும் கப்பலோட்டிய தமிழன் விருது வழங்கப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

வ.உ.சிதம்பரனாரின் 150 ஆவது பிறந்த நாளையொட்டி பல்வேறு அறிவிப்புகளை சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

அதில், கோவை வ.உ.சி.பூங்காவில் வ.உ.சிதம்பரனார் முழு உருவ சிலை அமைக்கப்படும் என்றும் வ.உ.சிதம்பரனார் பெயரில் ரூபா 5 லட்சம் ரொக்கப் பரிசுடன் கப்பலோட்டிய தமிழன் விருது வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வ.உ.சி. பெயரில் புதிய ஆய்வறிக்கை வெளியிடப்படும் எனவும் வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் திரைப்படம் நவீன டிஜிட்டல் முறையில் வெளியிடப்படும் எனவும் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் ஓராண்டுக்கு கட்டப்படும் அரசு கட்டடங்களுக்கு வ.உ.சி. பெயர் வைக்கப்படும் என்றும் தெரிவித்த அவர், வ.உ.சி. எழுதிய புத்தகங்கள் புதுப்பிக்கப்பட்டு குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

வ.உ.சி. நினைவு நாளான நவம்பர் 18 ஆம் திகதி தியாகத்திருநாளாக அனுஷ்டிப்படுமெனவும் தமிழக முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

# அங்கர் பால் மா பெற வரிசையில் காத்திருந்த மக்கள் மீது நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அதிரடி நடவடிக்கை



நிந்தவூர் பிரதேசத்தில் நேற்று அங்கர் பால் மாவினை கொள்வனவு செய்வதற்காக பொது மக்கள் வரிசையில் காத்திருந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் நிந்தவூர் பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள அங்கர் மொத்த விற்பனை நிலையமொன்றில் அங்கர் விற்பனை செய்யப்படுவதாக தகவல் அறிந்த பொதுமக்கள், அங்கு சென்று பால் மாவினை கொள்வனவு செய்ய எத்தணித்திருந்தனர். தற்போது நாட்டில் நிலவும் கொவிட் சூழ்நிலையினை மறந்து மக்கள் வரிசையில் நின்று இப்பால் மாவினை கொள்வனவு செய்வதற்காக காத்திருந்தனர்.

இத்தகவலை அறிந்த இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் குறிப்பிட்ட இடத்திற்கு விஜயம் செய்ததோடு, மக்களை அந்த இடத்தை விட்டு அகன்று செல்லுமாறு பணித்த போதும், தாங்கள் எப்படியாவது அங்கர் பால் மாவினை கொள்வனவு செய்ய வேண்டும் என்ற நிலையில் காணப்பட்டனர்.

இது விடயம் பற்றி நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவந்த போது உடன் நடவடிக்கை எடுத்த வைத்திய அதிகாரி, மக்கள் குழுமி நிற்கும் இடத்துக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை அனுப்பியதுடன், வரிசையில் காத்திருந்த மக்களுக்கு பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனை செய்ய முற்பட்டபோது அங்கிருந்து மக்கள் கலைந்து சென்றனர்.

இருந்தபோதும், மக்களின் நன்மை கருதி தாங்கள் இதனை விநியோகிக்க இருந்தோம் எனவும் அதற்கிடையில் மக்கள் அவசரப்பட்டு விட்டனர் என்றும், தாங்கள் இதனை ஒவ்வொரு கடைகளிலும் விநியோகிக்கவுள்ளோம் என இந்த மொத்த விற்பனை நிலையத்தின் வியாபார முகாமையாளர் தெரிவித்தார்.

## நியூசிலாந்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர் மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்தவர்

நியூசிலாந்தின் ஒக்லாந்திலுள்ள விற்பனை நிலையமொன்றில் மக்கள் மீது தாக்குதல் நடாத்திய நிலையில் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டவர் மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் நேற்று நியூசிலாந்தின் ஒக்லாந்திலுள்ள விற்பனை நிலையமொன்றில் மக்கள் மீது தாக்குதல் நடாத்தியபோது அவரை பின் தொடர்ந்து வந்த பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் இலங்கையைச் சேர்ந்தவர் எனவும் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர் எனவும் அந்த நாட்டு பிரதமர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் மட்டக்களப்பு காத்தான்குடி முதலாம் வட்டாரத்தினைச் சேர்ந்த முகமட் சம்சுதீன் ஆதில் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் எட்டு வயதிலேயே கொழும்பு சென்று அங்கு கொழும்பு இந்துக்கல்லூரியில் கல்வி கற்றுள்ளார் எனவும் பின்னர் 2011ஆம் ஆண்டு நியூசிலாந்து சென்றுள்ளார் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையினர் முன்னெடுத்து வருகின்றனர்.



## கூட்டுறவு சங்கத்தில் 125 ரூபாவுக்கு சீனி

சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவு சங்க கூட்டுறவு கடைகளில் தற்போது 125 ரூபாவுக்கு சீனி வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 125 ரூபாவுக்கு சீனியை கொள்வனவு செய்வதற்காக அப்பிரதேசங்களில் உள்ள மக்கள் ஆர்வத்துடன் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்றலில் சுகாதார நடைமுறைகளை பேணி நீண்ட வரிசையில் காத்திருந்து சீனி கொள்வனவு செய்தமையை காண முடிந்தது.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி மற்றும் கல்முனை பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. உதயராஜா போன்றோரின் உதவியுடன் கல்முனை பிராந்திய கூட்டுறவு சங்கங்களுக்கு 15,000 கிலோகிராம் சீனி வழங்கப்பட்டுள்ளதுடன் சாய்ந்தமருது ப. நோ. கூட்டுறவு சங்கத்திற்கு 1,500 கிலோ சீனி கிடைக்கப்பெற்றது மகிழ்ச்சியளிப்பதாகவும் அதற்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகள் எல்லோருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் சாய்ந்தமருது ப. நோ. கூட்டுறவு சங்கத்தலைவர் ஏ.உதுமாலெப்பை ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையை தொடர்ந்து சீனி விற்பனை தொடர்ந்தும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## வாவி கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி இயந்திரப் படகு ஒன்று எரிந்து சாம்பல்

மட்டக்களப்பு தலைமையக பிரிவிலுள்ள பெரிய உப்போடை வாவிகரை வீதியில் வாவி கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்து இயந்திரப் படகு ஒன்று இனம் தெரியாவர்களால் தீ வைக்கப்பட்டதில் 6 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி இயந்திரப் படகு ஒன்றுடன் வலைகள், முற்றாக எரிந்து சாம்பலாகிய சம்பவம் இன்று சனிக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாவிக்கரையில் நேற்று வெள்ளிக் கிழமை வழமைபோல கடலில் மீன்பிடிக்கச் சென்று காலையில் திரும்பி வந்து இயந்திரப் படகை கரையில் இயந்திரம் மற்றும் வலைகளுடன் நிறுத்திவிட்டு வீட்டுக்குச் சென்று பின்னர் இன்று அதிகாலை சுமார் 5 மணியளவில் மீன் பிடிப்பதற்கு கடலுக்கு செல்வதற்காக வந்தபோது படகு தீயில் எரிந்து சாம்பலாகிய நிலையில் இருப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சாய்ந்தமருதில் வீதிகளில் நடமாடிய 37 நபர்களுக்கு கொவிட் பரிசோதனை; 3 பேருக்கு தொற்று உறுதி

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.அல் அமீன் றிசாட்டின் வேண்டுகோளுக்கிணங்க பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட அணியினரால் வெள்ளிக்கிழமை 20 நபர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் மேலும் 17 நபர்களுக்கு அன்டிஜன் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

அன்டிஜன் பரிசோதனையில் 3 பேர் கொவிட் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர். நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து வீட்டிலேயே இருந்து கொள்ளுங்கள். கொரோனா ஆட்கொல்லி என்பதை ஒருபோதும் மறந்து விட வேண்டாம் என்று எச்சரித்துள்ளார் சாய்ந்த மருது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி.

## கேரளா கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் சாய்ந்தமருது பொலிஸாரால் கைது

கேரளா கஞ்சாவினை தம்வசம் வைத்திருந்த இளைஞனை சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பொலிவேரியன் கிராமத்தில் 135 கிராமுடன் குறித்த இளைஞனை நேற்று மதியம் கல்முனை விசேட பிரிவின் தகவலுக்கமைய சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீண்ட காலமாக குறித்த இளைஞன் கேரளா கஞ்சாவினை விற்பனை செய்து வருகிறார் என கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கல்முனை விசேட பிரிவினர் வழங்கிய தகவலை அடுத்து துரிதமாக செயற்பட்ட சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான குழுவினர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய 30 வயதுடைய இளைஞனை கைது செய்தமையுடன் அவர் வசம் இருந்த 135 கிராம் கேரளா கஞ்சாவினையும் மீட்டுள்ளனர்.

மேலும் இவ்வாறு கைதாகிய சந்தேக நபர் உட்பட அவர் வசம் மீட்கப்பட்ட சான்று பொருள்கள் சகிதம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# இலங்கையில் பெண்களுக்கான சர்வதேச ரி-20 லீக் தொடர்

லங்கன் பிறீமியர் லீக்கைப் போல வெளிநாட்டு கிரிக்கெட் நட்சத்திரங்களின் பங்குபற்றலுடன் பெண்களுக்கான ரி-20 லீக் போட்டித் தொடரொன்றை நடத்த இலங்கை கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. இந்த லீக் தொடருக்கு "Lanka Wom en's Super League T20' என்று பெயரிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பெண்களுக்கான உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளை இலக்கா கக் கொண்டு இந்த ரி-20 லீக் தொடரை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் நடத்துவதற்கு இலங்கைக் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

நான்கு அணிகள் பங்குபற்றவுள்ள இந்தத் தொடரில் அணியொன்றில் அதிகபட்சமாக 6 வெளிநாட்டு வீராங்கனைகளுடன், மொத்தமாக 16 பேர் இடம்பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 13 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரினை தம்புள்ளை அல்லது பல்லேகலையில் நடத்துவதற்கும்இலங்கைக்கிரிக்கெட்சபைதிட்டமிட்டுவருகிறது.

இந்த ரி-20 லீக் தொடரை நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபையின் விளையாட்டுச் சந்தைப்படுத்தல், மேலாண்மை நிறுவனங்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி இம்மாதம் 7 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியுடன் நிறைவடையும் என்றும் இலங்கைக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# இலங்கை 19 வயது கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக அவிஷ்க நியமனம்



இலங்கை 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக அவிஷ்க குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார் என இலங்கை கிரிக்கெட் சபை உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டிகள் வரை அவிஷ்க குணவர்தன இந்த அணியின் தலைமைப் பயிற்சியாளராகக் கடமையாற்றவுள்ளார்.

அவிஷ்க குணவர்தனவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த இரண்டு வெவ்வேறான ஊழல் குற்றச்சாட்டுகளை, சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புத் தீர்ப்பாயம் விசாரணைகளின் பின்னர், கடந்த மே மாதம் நீக்கியிருந்தது. இதனையடுத்து, அவருக்கு மீண்டும் கிரிக்கெட் சார்ந்த விடயங்களில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இம்மாதம் இலங்கையில் நடைபெறுவதாகவிருந்த ஒருநாள் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக அவிஷ்க குணவர்தனவை நியமிக்க அந்த நாட்டு கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும், ஆப்கானிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் குறித்த தொடரை அடுத்த ஆண்டுவரை ஒத்திவைப்பதாக அறிவித்துவிட்டன.

இதனிடையே, இலங்கை ஏ அணி மற்றும் இலங்கை வளர்ந்துவரும் அணிகளின் பயிற்சியாளராக கடமையாற்றியிருந்த அவிஷ்க, இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்கு பல திறமையான வீரர்களை கொண்டுவருவதில் மிகப் பெரிய பங்காற்றியவராக குறிப்பிடப்படுகிறார். இதேவேளை இலங்கை 19 வயதுக்குட்பட்ட அணியின் முகாமையாளராக இலங்கையின் முன்னாள் முதல்தர கிரிக்கெட் வீரரான மஹிந்த ஹலங்கொட நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணி, அடுத்துவரும் மாதங்களில் பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகளுடன் விளையாடவுள்ளது. அத்துடன், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்ட ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியிலும் அவ்வணி பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் மூன்றாவது சுற்றில் சிட்சிபாஸ் தோல்வி

கிராண்ட்ஸிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த மூன்றாவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் மூன்றாம் நிலை வீரரான கிறீஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்டெபனோஸ் சிட்சிபாசும், ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கார்லோஸ் அல்கராஸ் கார்பியாவும் மோதினார்கள்.

ஆரம்பம் முதலே இருவரும் சிறப்பாக ஆடினர்.

முதல் செட்டை கார்பியா 6-3 என கைப்பற்றினார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இரண்டாவது செட்டை சிட்சிபாஸ் 6-4 என வென்றார். மூன்றாவது செட்டை கார்பியா 7-6 என போராடிக் கைப்பற்றினார். நான்காவது செட்டில் ஆக்ரோசமாக விளையாடிய சிட்சிபாஸ் 6-0 என முழுமையாக வென்றார்.

ஆனாலும், வெற்றியாளரை நிர்ணயிக்கும் ஐந்தாவது செட்டை கார்பியா 7-6 என்ற கணக்கில் போராடிக் கைப்பற்றி, 6-3, 4-6, 7-6, 0-6, 7-6 என்ற செட் கணக்கில் வென்று நான்காவது சுற்றுக்கு கார்பியா முன்னேறினார். இந்தப் போட்டி 4 மணித்தியாலத்திற்கு மேல் நடைபெற்றது. இந்தப் போட்டியில் தோல்வியடைந்த சிட்சிபாஸ், அமெரிக்க ஓபன் தொடரில் இருந்து வெளியேற நேர்ந்துள்ளது.

# 2 ஆவது ரி-20 போட்டியில் நியூசிலாந்தை 4 ஓட்டங்களால் வீழ்த்தியது பங்களாதேஷ்



நியூசிலாந்து அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபாரமான வெற்றியைப் பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி நேற்று டாக்காவில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்து, 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 141 ஓட்டங்களை எடுத்தது. மொஹமட் நயீம் 39, லின்டன் தாஸ் 33, அணித்தலைவர் மஹ்மதுல்லா ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களை எடுத்தனர். நியூசிலாந்து சார்பில் ரவீந்திரா 3 விக்கெட்டுக்களையும், அஜாஸ் படேல், மக்கன்சி, பென்னட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


இதையடுத்து, 142 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி களமிறங்கியது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் விரைவில் ஆட்டமிழக்க, அணித்தலைவர் டொம் லதாம் பொறுப்புடன் ஆடி அரைச் சதமடித்தார். வில் யங் 22 ஓட்டங்களில் அவுட்டானார்.

இறுதி ஓவரில் வெற்றிக்கு 20 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், டொம் லதாம் களத்தில் நின்றும் 15 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தன. கடைசி பந்தில் 6 ஓட்டங்கள் தேவையாயிருந்த நிலையில் டொம் லதாமால் ஒரேயொரு ஓட்டத்தை மட்டுமே எடுக்கமுடிந்தது. இறுதியில் 5 விக்கெட்டுக்களை இழந்த 137 ஓட்டங்களை மட்டுமே நியூசிலாந்து அணியால் எடுக்கமுடிய, 4 ஓட்டங்களால் பங்களாதேஷ் வெற்றி பெற்றது. டொம் லதாம் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி ரி-20 தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது. ஆட்ட நாயகனாக மஹ்மதுல்லா தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது ரி-20 போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# இராணுவ ஆட்சியை நோக்கி அரசு நகர்கின்றது என மக்கள் சந்தேகம்

## சித்தார்த்தன் எம்.பி. கூறுகின்றார்



இராணுவ ஆட்சியை நோக்கி அரசாங்கம் நகர்வதாக மக்கள் சந்தேகிக்கின்றனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் த. சித்தார்த்தன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

இலங்கையினுடைய பொருளாதாரம் பாரிய பின்னடைவைக் கண்டு கொண்டு இருக்கின்றது.

மக்கள் ஒரு நேரம் உணவு உட்கொள்ள முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். அத்தியாவசியப் பொருள்களின் விலை ஒவ்வொரு நாளும் உயர்ந்து கொண்டு இருக்கின்றது.

இந்த விலையேற்றத்துக்கு அரசாங்கம் விட்ட தவறுகளே முக்கிய காரணமாக இருக்கின்றன.

அதாவது, அண்மையில் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, மிகப் பெருந்தொகையான சீனி இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்காமல் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அதனால்தான் சீனியின் விலைகள் அதிகரித்துள்ளது என சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் தற்போது பதுக்கிவைக்கப்பட்ட சீனிகள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு கவனயீனமின்றி அரசாங்கம் செய்கின்ற செயற்பாடுகளால் தான் மக்கள் அதிகளவு பாதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை கொரோனா அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலையில் முடக்கங்கள் தாமதமாக வந்தாலும் கூட, அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை.

அதாவது, மக்கள் அதிகளவான இடங்களில் ஒன்று கூடுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனை பொலிஸ் உள்ளிட்ட உரிய அதிகாரிகளும் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. ஆகவே இதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாவிட்டால், பெரும் இன்னலை அனைவரும் சந்திக்க நேரிடும்.

இதேவேளை அனைத்து விடயங்களையும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் அரசாங்கம் தீவிரமாக இருக்கின்றது. அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்பட்டு, ஓர் இராணுவ ஆட்சியை நோக்கி நகர்கின்றதை போல மக்கள் மத்தியில் பயத்தை உருவாக்கியுள்ளது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொவிட் தடுப்பூசி செலுத்துதல் இலங்கைக்கு முதலாவது இடம்

## சீனத் தூதரகம் வாழ்த்து

உலகில் அதிகளவில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தியுள்ள நாடுகள் தொடர்பான கடந்த வாரத்துக்கான தரப்படுத்தல் பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பெற்றுள்ளது.

நாட்டின் மொத்த சனத்தொகை அடிப்படையில் அதிகளவு கொரோனாத் தடுப்பூசி செலுத்தியுள்ள நாடுகள் தொடர்பாக இணையத்தளமொன்றால் வெளியிடப்பட்டுள்ள கடந்த வாரத்துக்கான தரவுகளிலேயே இலங்கைக்கு முதலிடம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த தரப்படுத்தல் பட்டியலில் இலங்கை 13 சதவீதத்தில் முதலிடத்தில் உள்ளதுடன், ஈக்வடோர் 12.5 சதவீதத்தில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

அதனைத் தொடர்ந்து புரூணை, நியூசிலாந்து மற்றும் கியூபா ஆகியன முறையே 3, 4 மற்றும் 5 ஆவது இடங்களில் உள்ளன. இதேவேளை குறித்த அறிக்கையை மேற்கோள் காட்டி கொழும்பிலுள்ள சீனத் தூதரகம், இலங்கைக்கு தமது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடன் பெற்றவர்களுக்கு சலுகைக்காலம் நீடிப்பு

## மத்தியவங்கி அறிவிப்பு

கடன் பெற்றவர்களுக்கான சலுகைக்காலத்தை நீடிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. நாட்டில் நிலவும் கொவிட் தொற்று பரவல் நிலை மற்றும் இதனால் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அதன்படி குறித்த விடயங்களால் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தகர்கள் மற்றும் தனிநபர்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் சலுகையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற வணிக நிறுவனங்களுக்கு சுற்று நிருபத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் முன்வைத்த கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

கடன் பெற்ற, பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைக்கு அமைவாக வங்கிகள் இந்தச் சலுகையை வழங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இரகசியமாக எதனையும் செயற்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு கிடையாது

## ஜி.எல்.பீரிஸ் திட்டவட்டம்



நாட்டில் சட்டத்துறை, நீதித்துறை மற்றும் ஊடகத்துறை ஆகியன சுயாதீனமாக செயற்படுகின்றன. எனவே இரகசியமாக எதனையும் செயற்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஒருபோதும் கிடையாது என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இம்முறை நடைபெறவுள்ள மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பாக அதிகளவில் பேசப்படும். எனினும் அதனை சிறந்த முறையில் கையாள்வதற்கான நடவடிக்கைகள், இலங்கையின் பொதுச்சட்டத்துக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், யுத்த காலத்தில் காணாமல் போனார் விவகாரம், மீள்குடியமர்த்தல், வடக்கு- கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பினுடைய போராளிகளின் விடுதலை உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் அரசாங்கம் சிறந்த நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்காக, முன்னாள் பிரதம நீதியரசர் தலைமையில் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பிலான ஆலோசனை சபை நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆலோசனை சபையின் ஊடாக எதிர்காலத்தில் சிறந்த தீர்மானங்கள் எடுக்கப்படும் என ஜி.எல்.பீரிஸ் உறுதியளித்துள்ளார்.

# காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் மரணம் திட்டமிடப்பட்ட கொலை என்கிறார் அருட்தந்தை



காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்காக நீதி கேட்டு வந்த நிலையில் உயிரிழந்தவர்கள் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர் என அருட்தந்தை சக்திவேல் குறிப்பிட்டார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அத்துடன், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களில் உயிரிழந்தவர்கள், தமது காணாமலாக்கப்பட்ட சொந்தங்களுக்கான நீதியை எதிர்பார்த்திருந்து அது கிடைக்காத நிலையில் கவலையால் பலநோய்களுக்கு ஆட்பட்டு உயிரிழந்துள்ளனர்.

எனவே இந்த மரணங்கள் இயற்கையாக நடந்த மரணங்கள் அல்ல.

இது திட்டமிட்டு செய்யப்படுகின்ற கொலையாகவே நாம் கருதுகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு தூதுவர்களுடன் நிதி அமைச்சர் பஸில் சந்திப்பு



இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சந்தித்து பேசியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அதற்குத் தேவையான சர்வதேச ஒத்துழைப்புகள் தொடர்பில் இவ்வாறு பேச்சு நடத்தியுள்ளார் எனத் தெரியவருகிறது.

நாட்டில் உள்ள 43 வெளிநாட்டு தூதர்களில் 35 வெளிநாட்டுத் தூதுவர்களை பஸில் ராஜபக்ஷ இதுவரை சந்தித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. எஞ்சியுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை விரைவில் சந்திப்பார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் 2022 ஆம் நிதி ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய யோசனைகள் தொடர்பில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பஸில் ராஜபக்ஷ ஏற்கனவே சந்திப்பு நடத்தி உள்ளார்.

அரசாங்கத்துடன் தொடர்புடைய ஏனைய கட்சிகளுடனும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர்களுடனும் இது தொடர்பில் பஸில் ராஜபக்ஷ பேச்சு நடத்தியுள்ளார்.

அடுத்த வாரம் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் கிராமிய மட்ட அமைப்பாளர்களை சந்தித்து வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் பஸில் ராஜபக்ஷ கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.09.2021இல் வெளியிடப்பெற்றது.